


18. 10. 2025

தலைப்பு செய்திகள்

- ராணுவ தளவாட உற்பத்தி மையமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
- GST சீர்திருத்தங்கள் மின்னணு சாதன பொருட்களின் விற்பனையை அதிகரித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- தமிழகத்தில் குற்றச்செயல்களை முழுமையாக தடுக்க நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் குறிப்பிட்டுள்ளார்.
- தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பிரதமர் - வாழ்த்து

பிரதமர் திரு.நரேந்திரமோடி நாட்டு மக்களுக்கு தனத்ரயோதசி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

இந்நன்நாளில் அனைவரது வாழ்விலும், வளம், ஆரோக்கியம், மகிழ்ச்சி பெருக தன்வந்த்ரி பகவானின் அருள் கிடைக்கட்டும் என அவர் கூறியுள்ளார்.

இந்நாளை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*************

ராஜ்நாத்சிங்

பாதுகாப்பு தளவாட உற்பத்தி மையமாக இந்திய மேம்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் பிரம்மோஸ் ஏவுகணை தொழில் வழிதடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ஏவுகணைகளை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், இதன்மூலம் நாட்டின் நலனுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கையும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்றார்.

இந்தியாவிடமிருந்து பாதுகாப்பு தளவாட தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை பல்வேறு உலக நாடுகள் பெற விரும்புவதாக கூறிய அவர், பிரம்மோஸ் தொழில் வழிதடத்தில் நான்காயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்களில் இரு நாடுகள் கையெழுத்திட்டதை சுட்டிக்காட்டினார்.

*************

அஷ்விணி வைஷ்ணவ்

மத்திய அரசின் அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவை வரி சீர்திருத்தங்கள் நாட்டின் மின்னணு சாதன பொருட்களின் விற்பனையை அதிகரித்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சரக்கு சேவை வரி சீர்திருத்தம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நவராத்திரி பண்டிகை காலத்தில் இப்பொருட்களின் விற்பனை 20 முதல் 25 சதவிகிதம் வரை அதிகரித்துள்ளதாக எடுத்துரைத்தார்.

மின்னணு சாதன உற்பத்தி துறையில் 25 லட்சம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதை சுட்டிக்காட்டிய அமைச்சர், அமெரிக்காவிற்கான ஸ்மார்ட் ஃபோன் விநியோகத்தில் சீனாவை மிஞ்சி இந்தியா சாதனை படைத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன்,வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயலும் இந்த செய்தியாளர் சந்திப்பில் உடனிருந்தனர்.

முன்னதாக புதுதில்லியில் நடைபெறும் உலகளாவிய உச்சிமாநாட்டில் உரையாற்றிய திரு. அஷ்விணி வைஷ்ணவ் உலகிலேயே 2ஆவது பெரிய 5-ஜி அலைக்கற்றை சேவையை பயன்படுத்தும் நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார்.

நாட்டின் தகவல் தொழில்நுட்ப இணைப்பில் 90 சதவிகிதம் 5-ஜி அலைக்கற்றை, இணைப்பில் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

நாட்டின் தொலைதூர கிராம பகுதிகளிலும் இணையதள சேவையை உறுதி செய்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக கூறினார்.

*************

பீஹார்

பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு முதற்கட்டமாக வரும் 6-ம் தேதி தேர்தல் நடைபெறும் நிலையில் வேட்பு மனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்று வருகிறது.

மனுக்களை திரும்பபெற நாளை மறுநாள் கடைசிநாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

18 மாவட்டங்களை உள்ளடக்கிய 121 தொகுதிகளில் போட்டியிட ஆயிரத்து 698 பேர் மனுதாக்கல் செய்துள்ளனர்.

இதனிடையே 20 மாவட்டங்களில் 122 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் இரண்டாவது இறுதி கட்ட தேர்தலில் இதுவரை 290 பேர் மனுதாக்கல் செய்துள்ளனர்.

*************

புத்தொழில் மாநாடு

கோவையில் கடந்த 9ஆம் தேதி நடைபெற்ற உலக புத்தொழில் மாநாட்டின் மூலம் 127 கோடி ரூபாய் மதிப்பிலான 23 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சென்னையில் இன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறை Startup-களை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு

மாநிலத்தில் பல்வேறு இடங்களில் 453 புத்தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் சம வாய்ப்பு மற்றும் பயனாளிகளுக்கான மானிய நிதியை அதிகரித்தல், உலகளாவிய வர்த்தக தொடர்புகளை உறுதிசெய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளால், தொழில் வளர்ச்சி அதிகரித்து ஏராளமானோருக்கு வேலை வாய்ப்பு உறுதிசெய்யப்படும்.

*************

கீதாஜீவன்

தமிழகத்தில் குற்றச்செயல்களை முழுமையாக தடுக்க நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக மாநில சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மகளிர் காவல் நிலையத்தை இன்று நேரில் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் ஒருபகுதியாக மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 686 நவீன கேமராக்களுடன் ஒருங்கிணைந்த நவீன காவல்கட்டுப்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கண்காணிப்பு பணிகளை தீவிரபடுத்துவதை நோக்கமாக கொண்டு நிறுவப்பட்டுள்ள இந்த கேமராக்கள் மின்சாரம் தடைபட்டாலும் செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மகளிர் நலனை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறிய அமைச்சர் குடும்ப வன்முறை, தொடர்பான புகார்களை 181 என்ற எண்ணில் தெரிவிக்குமாறு அறிவுறுத்தினார்.

*************

விருதுநகர் - வாய்ஸ்

மத்திய அரசின் அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவை வரி சீர்திருத்த நடவடிக்கை பெரிதும் பயனளிப்பதாக விருதுநகர் மாவட்டம் சிவகாசியை சேர்ந்த பட்டாசு விற்பனையாளர் மற்றும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

……… வாய்ஸ் …………

*************

வானிலை

தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 36 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என கூறியுள்ளது.

இதனிடையே வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக இம்மையம் கூறியுள்ளது.

*************

வெள்ளபெருக்கு

தேனி மாவட்டத்தை ஒட்டிய மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் பலத்த மழை காரணமாக வைகை ஆற்றில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை தாமிரபரணி ஆற்றில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் கன மழை காரணமாக முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 136 அடியை எட்டிய நிலையில் 8 மதகுகள் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படுவதால் வல்லகடவு, சப்பாத்து, உப்புதாரா, உள்ளிட்ட பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி உப்பாற்று ஓடையிலிருந்து ஆயிரத்து 500 கன அடி நீர் வெளியேற்றப்படுவதால், காலங்கரை, குலையன்கரிசல், உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தேனி மாவட்டம் சுருளி மேகமலை அருவிகளில் மற்றும் குற்றால அருவிகளில் வெள்ளபெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

*************

இருவரி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விபத்தில்லா மற்றும் மாசற்ற தீபாவளியை கொண்டாட பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் அறிவுறுத்தியுள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் இதமான சூழல் நிலவுவதால் தீபவாளி பண்டிகை வியாபாரம் தொய்வின்றி நடைபெறுகிறது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மேலும் விவசாயிகள் குறுவை நெல் அறுவடை பணியில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் நடப்பு கல்வி ஆண்டிற்கான சித்தா, யுனானி, மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர் சேர்க்கைக்கு வரும் 22ஆம் தேதிவரை இணையவழியில் விண்ணப்பிக்குமாறு அரசு அறிவித்துள்ளது.

*************

கோவில்

துலாமாத பிறப்பை ஒட்டி மயிலாடுதுறை மாவட்டம் திருவென்காடு அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோவிலில் சிறப்பு தீர்த்தவாரி இன்று நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் தீர்த்தகுளங்களில் நீராடி வழிபட்டனர்.

*************

பேட்மிண்டன்

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இன்று இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை – ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

*************

கிரிக்கெட்

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி பெர்த்தில் நாளை நடைபெறுகிறது.

இரு அணிகளுக்கிடையே 3 ஒருநாள் போட்டிகளும்,

ஐந்து 20-20 போட்டிகளும் நடைபெற உள்ளன.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது